செ.வெ.எண் 852 நாள் 13-10-08

பத்திரிக்கைச் செய்தி

இன்று (13.10.2008) காலை 11 மணியளவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்களது அறையில் கோயம்புத்தூர் மாவட்டம் முதலிப்பாளையத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொழில் தொடங்க கட்டப்பட்டு ஒதுக்கப்பட்ட தொழிற் கூடங்களின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்த தொழிற் கூடங்களை லாபகரமாக நடத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், தொழிற் கூடங்களை ஒதுக்கீடு பெற்றவர்கள் தொழிலை லாபகரமாக நடத்தி தாட்கோவிற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திற்கும் திருப்பி செலுத்த வேண்டிய தொகையை குறித்த காலத்தில் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. மேலும் ஈரோடு மாவட்டம் ஈங்கூரில் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு இதுவரை ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கும் தொழிற்கூடங்களை பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்வது குறித்தும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொழிற்கூடங்களை லாபகரமாக நடத்துவதற்கும் அரசுக்கு ஆலோசனை வழங்க தாட்கோ மேலாண்மை இயக்குநர், ஆதிதிராவிடர் நல ஆணையர் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக மேலாண்மை இயக்குநர் ஆகியோரை கொண்ட குழு அமைப்பது என இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. மேலும் தாட்கோவால் பல மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்கள் வாடகைக்கு விடப்படாமல் இருந்தால் உடனடியாக அக்கடைகளை வாடகைக்கு விட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சரவர்கள் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலர் திரு வ.கனகராஜ்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திருமதி கண்ணகி பாக்கியநாதன்,இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை ஆணையர் திரு மாலிக் பெரோஸ்கான்,இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு தயானந் கட்டாரியா, இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக மேலாண்மை இயக்குநர் திரு உமாசங்கர்,இ.ஆ.ப., மற்றும் தாட்கோ உயர்அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

13x08

(வே.கருப்பசாமி)
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9